**திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**அ.வ.எண்: 35/2023**

**வா.சா.1**

**நாள்: 19.11.2024**

வாதி தரப்பு சாட்சியாக வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 44ஆம் விதியின் கீழ் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதீஷ் (எ) சதீஷ்குமார் | | |
| தந்தை பெயர் | ஜெயமோகன் | | |
| கிராமம் | கீழத்திருப்பூந்துருத்தி | தொழில் | விவசாயம் |
| வட்டம் | திருவையாறு | வயது | 33 ஆண்டுகள் |

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கின் வாதியாவேன் . எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இவர் மூலம் கீழ்காணும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1) 04.03.1992 ஆம் தேதியிட்ட வாதியின் தகப்பனார், வாதிக்காக கிரயம் பெற்ற கிரயம் ஆவணம் அசல். வா.சா.ஆ.1.

2) வாதியின் தகப்பனார் தாவா இடத்தில் கட்டப்பட்ட வீட்டிற்கு தனது பெயரில்மின் இணைப்பு எண் 408-014-725 பெற்றதற்காக வழங்கப்பட்ட மின் கட்டண அட்டை அசல். வா.சா.ஆ.2.

3) 31.03.2019 ஆம் தேதியிட்ட வாதி பெயரில் வீட்டிற்கு கட்டப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் . வா.சா.ஆ.3.

4) 18.12.2020 ஆம் தேதியிட்ட வாதி பெயரில் வீட்டிற்கு கட்டப்பட்ட வீட்டு வரி ரசீது அசல். வா.சா.ஆ.4.

5)24.03.2022 ஆம் தேதியிட்ட வாதி பெயரில் வீட்டிற்கு கட்டப்பட்ட வீட்டு வரி ரசீது அசல். வா.சா.ஆ.5.

6) வாதிக்கு இந்திய அரசால் வழங்கப்பட்ட ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்ட நகல். வா.சா.ஆ.6.

7) வாதிக்கு இந்திய தேர்தல் ஆணையம் வழங்கிய வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்ட நகல். வா.சா.ஆ.7.

8) வழிகாட்டி மதிப்பு அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்ட கணினி நகல். வா.சா.ஆ.8.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

/ஒ .ம்/

திரு. D. ஹரிராம், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு(மு.கூ.பொ).